புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **25-04-2022**

**பத்திரிகை செய்தி**

புதுச்சேரி மதகடிப்பட்டு ஸ்ரீ மணக்குள விநாயகர் தொழில்நுட்பக் கல்லூரியில் காந்தி வேர்ல்டு பவுண்டேஷன் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் (அண்ணல் மகாத்மா காந்தியின் 150-வது ஆண்டு விழா, வ.உ.சி யின் 150வது ஆண்டு விழா, மகாகவி பாரதியின் நூறாவது நினைவு ஆண்டு விழா, இந்திய விடுதலையின் 75-வது ஆண்டு விழா மற்றும் மாண்புமிகு மகளிர்கான விருதுகள் வழங்கும் விழா)விழாவினை மாண்புமிகு துணை நிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று(25-04-2022) தொடங்கி வைத்தார்.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த பெண்களுக்கு விருதுகள் வழங்கி பேசிய துணைநிலை ஆளுநர் பெண்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் திறமையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், விழாவில் மாணவர்களுக்கான மகாத்மா காந்தி கார்ட்டூன் திரைப்படம், முதல் சுதேசி தடுப்பூசி வ.உ.சி தடுப்த்தின் குறுத்தட்டுகளை வெளியிட்டார்.